இந்து தமிழ் திசை
4 CHENNAI ஞாயிறு, மே 19, 2019

ஸ்ரீராமச்சந்திரா மருத்துவ மையத்தில்

# மூளைச்சாவு அடைந்த பெண்ணின் உறுப்பு தானத்தால் 5 பேருக்கு மறுவாழ்வு

■ சென்னை

மூளைச்சாவு அடைந்த பெண்ணின் உறுப்பு தானத்தால் 5 பேர் மறுவாழ்வு பெற்றுள்ளனர்.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியை சேர்ந்தவர் ஜான் கிளாரா (50). மூளையில் ரத்தக் குழாய் வீக்கம் ஏற்பட்டதால் சென்னை போரூர் ஸ்ரீராமச்சந்திரா மருத்துவ மையத்தில் கடந்த ஏப்ரல் 25-ம் தேதி சேர்க்கப்பட்டார். அவருக்கு எண்டோவாஸ்குலர் எம்பலைசேஷன் சிகிச்சை அளிக்கப்பட்டது. சிகிச்சை பலனின்றி, கடந்த 9-ம் தேதி அவர் மூளைச்சாவு அடைந்தார்.

இந்நிலையில், அவரது



▲ ஜான் கிளாரா

உடல் உறுப்புகளை தானம் செய்ய கணவர் சவரிமுத்து, மகன் ஆண்டனி அருள் கஸ்பர், மகள் அன்னை தெரசாள் முன்வந்தனர்.

இதையடுத்து, ஸ்ரீராமச்சந்திரா மருத்துவ மையத்தில் டாக்டர் முகமது ரேலா தலைமையிலான குழுவினர் டெல்லியை சேர்ந்த ஒரு நோயாளிக்கு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மூலம், ஜான் கிளாராவின் கல்லீரலைப் பொருத்தினர்.

ஒரு சிறுநீரகம் சென்னையை சேர்ந்த ஒரு நோயாளிக்கு பொருத்தப்பட்டது. மற்றொரு சிறுநீரகம், அப்போலோ மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டது. இதயம், வலது நுரையீரல் ஆகியவை ஃபோர்ட்டிஸ் மலர் மருத்துவமனைக்கு அளிக்கப்பட்டன. ஜான் கிளாராவின் உறுப்பு தானத்தால் 5 நோயாளிகள் மறுவாழ்வு பெற்றுள்ளனர்.

சென்னை போரூர் ஸ்ரீராமச்சந்திரா மருத்துவ மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.